**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.2, SALEM.**
**Present: J. Dhinesh Kumaran,B.A.,B.L.,(Hons)**
**Judicial Magistrate No.II, Salem.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | | CC. No. 1085/2022 |
| Deposition of witness for | Prosecution<br>Defence<br>Court | PW : 1 (Lw: 1 )<br>DW : |
| Name: | | திரு. ஹரிஹரன் |
| Father's/Husband Name: | | த/பெ. ராமலிங்கம் |
| Village: | | |
| Taluk: | | |
| Age: | | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 of the day 12.06.2024 (12th day of June, 2024) | | |

Accused 1. Haseen, 2. Nayas, 3. Yarab and 4. Jilani present. Learned APP Mrs. Roja present. Counsel for the accused Mr.C. Murali for Mr. R. Mani present.

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 12.17 PM**

**முதல் விசாரணை–**

1. நான் கிச்சிப்பாளையத்தில் உள்ள நாராயணா நகரில் குடியிருக்கிறேன். நான் டிரான்ஸ்போர்ட் வைத்து தொழில் செய்கிறேன்.

2. 31.10.2021 ந் தேதி இரவு 10 மணி அளவில் அடையாளம் தெரியாத 3 நபர்கள் மதுபோதையில் எனது வீட்டிற்கு முன்பு சத்தம் போட்டுக் கொண்டிருந்ததை நான் சென்று கேட்டபோது அவர்களில் ஒருவர் என்னை

Sd/- PW - 1

J DHINESH KUMARAN Digitally signed by J DHINESH KUMARAN Date: 2024.06.12 17:37:48 +0530

அறுவறுக்கத்தக்க கெட்ட வார்த்தைகளால் திட்டினார். மற்றொருவர் அவரது கையால் எனது தோள்பட்டையில் அடித்தார்.

3. நான் சத்தம் போடவே அங்கிருந்து அவர்கள் சென்றுவிட்டார்கள். பின்னர் அன்றைய தினமே இரவு சுமார் 12 மணி அளவில் எனது வீட்டின் கதவை யாரோ தட்டினார்கள். நான் வெளியே வந்து பார்த்தபோது என்னிடம் இரவு 10.30 மணி அளவில் தகராறு செய்த நபர்கள் என் வீட்டின் வெளியே, முன்பு நடந்த பிரச்சனைக்கு போலீசிடம் செல்வாயா என்று திட்டினார்கள்.

4. அந்த சத்ததைக் கேட்டு எனது சகோதரர் செந்தில்வேல் அங்கு வந்தார். அங்கு அவரைப் பார்த்த அந்த அடையாளம் தெரியாத நபர்கள் என்னைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி அங்கிருந்து சென்றுவிட்டார்கள். இந்த சம்பவம் குறித்து நான் கிச்சிப்பாளையம் சூரமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

5. சம்பவத்தின் போது எனது வீட்டிற்கு முன்பு தகராறு செய்த நபர்களை எனக்கு அடையாளம் தெரியாது. ஆஜர் எதிரிகள் தான் என்னை அடித்தார்களா என்பது குறித்தும் எனக்கு தெரியாது.

6. என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். ஆஜர் எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். **புகாரில் உள்ள கையெழுத்து (அசாஆ.1) ஆகவும் மற்றும் ஆஜர் எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள சமாதான மனு (அசாஆ.2) ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

Sd/- PW - 1

J DHINESH KUMARAN

Digitally signed by J DHINESH KUMARAN
Date: 2024.06.12 17:37:57 +0530

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதை இந்நீதிமன்றம் ஏற்று சாட்சியை இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 154 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி வழங்கியது.**

7. 31.10.2021 ந் தேதி இரவு 10.30 மணி அளவில் ஆஜர் எதிரிகள் நாராயணா நகரில் உள்ள தனது வீட்டிற்கு முன்பு மது போதையில் சத்தம் போட்டுக் கொண்டிருந்ததை தான் தட்டிக் கேட்டதால் தன்னை அறுவறுக்கத்தக்க கெட்ட வார்த்தைகளால் திட்டி, கையால் தோள்பட்டையில் அடித்ததாகவும், தான் சத்தம் போட்டதால் அப்போது அங்கிருந்து அவர்கள் சென்றுவிட்டதாகவும் மீண்டும் இரவு 12.00 மணி அளவில் சம்பவ இடத்திற்கு வந்த அவர்கள் மீண்டும் தகராறு செய்ததாகவும் சத்தம் கேட்டு தனது சகோதரர் செந்தில்வேல் அங்கு வந்ததாகவும், அங்கிருந்த ஆஜர் எதிரிகள் தனக்கும், செந்தில்வேலுக்கும் கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், அதனால் தான் இந்த சம்பவம் குறித்து கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் போலீஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாக போய்விட்டதால் ஆஜர் எதிரிகளுக்கு சாதகமாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:** சாட்சி பிறழ் சாட்சியாக ஆனதால் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று வழக்கறிஞர் கூறினார்.

**மறு விசாரணை இல்லை.**

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம்: 12.27 PM**

Taken down before me in Open Court, read over to the witness and admitted by the deponent to be correct.

J DHINESH KUMARAN

Digitally signed by J DHINESH KUMARAN
Date: 2024.06.12 17:38:05 +0530

Judicial Magistrate No.II, Salem.

Sd/- PW - 1